அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

ஹேவிளம்பி ஆண்டு மார்கழி - தை ஜனவரி 2018 முரசு 11 ஒலி 127

## தைப்பூச சிறப்பிதழ்



**வடலூர் தைப்பூச அழைப்பிதழ் மற்றும்**
**தியான யாத்திரை அழைப்பிதழ் உள்ளே...**

பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# தைப்பூச ஜோதி தரிசனப் பெருவிழா அழைப்பிதழ்



அன்புள்ளம் கொண்ட ஆன்மநேய சகோதர சகோதரிகள் அனைவருக்கும் வந்தனம். உத்தர ஞான சிதம்பரம் என்று போற்றப்படும் வடலூர் பெருவெளியில் நம் திருவருட்பிரகாச வள்ளல் பெருமானாரால் நிறுவப்பட்ட சத்திய ஞானசபையில் ஞான நிறைவு நாளாம் தைப்பூச தினத்தன்று ஜோதி தரிசனப் பெருவிழா வருடந்தோறும் கொண்டாடப்படுகின்றது.

இவ்விழாவானது **நிகழும் ஹேவிளம்பி வருடம் தை திங்கள் 17ஆம் நாள் செவ்வாய்க்கிழமை (30.01.2018) கொடியேற்றத்துடன் துவங்கி, தை 18ஆம் நாள் புதன்கிழமையன்று (31.01.2018) ஏழு திரை நீக்கி தைப்பூச ஜோதி தரிசனப் பெருவிழா** பல்வேறு ஆன்மீக சிறப்பு நிகழ்வுகளோடு நடைபெறவுள்ளது. உலகம் முழுவதிலிருந்தும் சன்மார்க்க சாதுக்களும், ஞானிகளும், தொண்டர்களும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பிக்க உள்ளார்கள். இந்த விழாவில் தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் மற்றும் நண்பர்களும் கலந்துகொண்டு தொண்டு செய்து, ஜோதி தரிசனம் கண்டு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய திருவருட்பிரகாச வள்ளலாரின் திருவருளைப் பெற்று வாழ்வில் எல்லா வளங்களையும் அடைய அன்புடன் அழைகின்றோம்.

ஜனவரி
**31**
2018

**அவ்வமயம் நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தின் சார்பாக வடலூர் ரயில்வே ஸ்டேஷன் ரோட்டில் அமைந்துள்ள TRM சாந்தி திருமண மண்டபத்திலும் வடலூர் சத்திய ஞான சபை ஆர்ச் ரோட்டில் அருட்ஜோதி அரங்க மேடை அமைத்தும்**

- **அகவல் பாராயணம்**
- **சத்சங்கம்**
- **அன்னதானம்**
- **மகாமந்திர வேள்வி**
- **திருஅருட்பா இசை நிகழ்ச்சி**

**போன்ற சன்மார்க்க நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது.**

அன்பர்கள் தங்களால் இயன்ற உதவியைப் பொருளாகவோ, நிதியாகவோ அளித்து இப்புண்ணிய வைபவத்தில் பங்குகொள்ளலாம். தங்களின் நன்கொடைகளுக்கு **80G** பிரிவின் கீழ் வருமானவரி விலக்கு உண்டு. நன்கொடை அளிக்க விரும்புவோர் கீழ்கண்ட வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

**Bank:** HDFC Bank Ltd., **Name:** Arutperunjothi Vallalar Charitable Trust,

**A/c No.:** 08761450000048, **Branch:** Thiruvannamalai, **IFSC Code:** HDFC0000876

### ஆறுகால ஜோதி தரிசன விபரம்

**நாள்: 31.01.2018**
காலை 6.00, 10.00, மதியம் 1.00,
இரவு 7.00, 10.00
**மறுநாள்: 01.02.2018**
காலை 5:00



### சித்திவளாகத் திருவறை தரிசனம்

**நாள்: 02.02.2018 வெள்ளிக்கிழமை**
இடம்: மேட்டுக்குப்பம்
நேரம்: பகல் 12.00 முதல்
மாலை 5.00 வரை

**அனைவரும் வருக! வருக!**

தொடர்புக்கு: +91 8838540176, +91 9942776351

## தைப்பூச சத்சங்க விழா நிகழ்ச்சி நிரல்

## அருட்ஜோதி அரங்க மேடை, வடலூர் பெருவெளி.

### நாள்: 30-01-2018, செவ்வாய்

7:00pm - 9:00pm - **திருஅருட்பா இசைக் கச்சேரி**

வழங்குபவர் : தயவுதிரு.தியான் செந்தில் Avl, பொள்ளாச்சி.

9:00pm - 11:00pm - **மகாதேவ மாலை - சிறப்பு சத்சங்கம்**

வழங்குபவர் : தயவுதிரு. குஞ்சிதபாதம் Avl, கோவை.

### நாள்: 31-01-2018, புதன்

6:00am - 8:00am - **திருஅருட்பா இசைக்கச்சேரி**

வழங்குபவர் : தயவுதிரு. ஜெயப்பிரகாஷ் Avl, பொள்ளாச்சி.

8:01am - 10:00am - **தெய்வத்தீந்தமிழ் திருஅருட்பா இசை சத்சங்கம்**

வழங்குபவர் : தயவுதிரு. நல்லசிவம் Avl, ஈரோடு.

10:01am - 11:30am - **திருஅருட்பா இசைக்கச்சேரி**

வழங்குபவர் : தயவுதிரு. ஆத்மநாதன் Avl, சென்னை.

11:31am - 1:30pm - **அருள்நெறி ஒன்றே தெருள் நெறி சிறப்பு சத்சங்கம்**

வழங்குபவர் : தயவுதிரு. குப்புசாமி Avl, சேலம்.

1:31pm - 3:00pm - **திருஅருட்பா இசைக்கச்சேரி**

வழங்குபவர் : தயவுதிரு. சீனுவாசன் Avl, திருக்கோவிலூர்.

3:01pm - 4:30pm - **உறவு எது? பகை எது? சிறப்பு சத்சங்கம்**

வழங்குபவர் : தயவுதிரு. கங்கை மணிமாறன் Avl, குத்தாலம்.

4:31pm - 6:30pm - **குடும்ப கோரம் - சிறப்பு சத்சங்கம்**

வழங்குபவர் : தயவுதிரு. மு.பா. பாபு Avl, சென்னை.

6:31pm - 9:00pm - **சன்மார்க்க கருத்தரங்கம்**

வழங்குபவர் : இலக்கியச் சுடர் திரு. இராமலிங்கம் Avl, சென்னை.

9:01pm - 10:30pm - **மனுமுறை கண்ட வாசகம் உணர்த்தும் செவ்விய நெறி - சிறப்பு சத்சங்கம்**

வழங்குபவர் : தயவுதிருமதி. பிரபாவதி அம்மையார், சென்னை.

*திருச்சிற்றம்பலம்*

# சுத்த சன்மார்க்கப் பிரார்த்தனை

**ஸ்ரீ** பார்வதிபுரம் என்னும் உத்தரஞான சிதம்பரத்தின் கண்ணே அகிலாதாரமாய் விளங்கும் ஸ்ரீ சமரச வேத சன்மார்க்க சங்கத்துப் பெருந்தலைமைப் பதியாக வீற்றிருந்தருளும் அருட்பெருஞ்ஜோதியராகிய எமது ஆண்டவனார் திருச்சந்நிதிக்கு யானெனும் போத நாச வந்தனம் செய்த விண்ணப்பம்.

எம் இறையவரே! இது பரியந்தம் யானாகத் தேடியதோர் பொருள் என்பது இல்லை. ஆகவே, தேவரீர் பெருங்கருணையால் என்னை உய்யக்கொள்ள உபகரித்தருளிய உடல் பொருள் ஆவி என்னும் மூன்றையும் அறியாமையால் **யான் எனது** என்று கொண்டதோர் சுதந்திரமானது துன்ப இன்ப விளைவுக்கு ஆதாரமாய் இன்றைய வரையில் என்னைப் பற்றியிருந்து ஒன்றை யான் பெரும் பொருளாக எண்ணி நின்றனன். ஆதலால் அச்சமரச சன்மார்க்க சங்கத்துச் சாதுக்கள் சமுகத்து நிற்கப்பெற்ற விசேடத்தால் அத்தற்சுதந்திரப் பொருளைத் தேவரீர் பெருங்கருணைச் சந்நிதி முன்னே அர்ப்பித்தனன். இனி, தேவரீர் அதனை அருள் வசமாக்கி ஏழையாகிய என்னையும் என்னை அடுத்த சுற்றமும் என்னோடு பழகிய நட்பினராதியரையும் உய்யக் கொண்டருளுக.

ஓ! ஒப்பு உயர்வின்றி விளங்குகின்ற ஒருவரே! தேவரீர் திரு வண்ணமும், திருவருட் சமுகத் திருவண்ணமும் அறிதற்கும் கருதுதற்கும் துதித்தற்கும் எத்திறத்தானும் கூடாவாயினும் அடிமையளவிற்கு இயன்றபடி அறியாது அறிந்தும், கருதாது கருதியும், துதியாது துதித்தும் எனது உரிமையை ஊற்றம் செய்கின்றவனானேன். வந்தனம்! வந்தனம்!

*திருச்சிற்றம்பலம்*

# பிரார்த்தனை செய்யும் முறை

ஒருவன் பிரார்த்தனை செய்வதில் அவனுக்காக மட்டும் செய்வது சரியல்ல. இந்த உலகமெலாம் வாழும்படி பிரார்த்தனை செய்தல் வேண்டும். அப்படிச் செய்வதால் அதில் ஒருவனுக்கு வேண்டியவை எல்லாம் அடங்கிவிடுகின்றன. பிரார்த்தனை செய்ய வேண்டுமாகில் இப்படித்தான் செய்யவேண்டும்.

– திருஅருட்பிரகாச வள்ளலார்

*திருச்சிற்றம்பலம்*

இஃது மேலேறும் வீதி

# சத்திய ஞானசபை விளம்பரம்

**"காணாத காட்சிகள் காட்டுவிக்கின்றது காலமெல்லாம்
வீணாள் கழிப்பவர்க்கு எய்தஅரிதானது வெஞ்சினத்தால்
கோணாத நெஞ்சில் குலாவி நிற்கின்றது கூடிநின்று
சேணாடர் வாழ்த்துவது உத்தர ஞான சிதம்பரமே"** – திருஅருட்பா

**உ**லகத்தில் பெறுதற்கு மிகவும் அருமையாகிய மனித தேகத்தைப் பெற்ற நண்பர்களே!

அறிவு வந்த காலமுதல் அறிந்து அறியாத அற்புத அறிவுகளையும், அடைந்து அறியாத அற்புத குணங்களையும், கேட்டறியாத அற்புதக் கேள்விகளையும், செய்தறியாத அற்புதச் செயல்களையும், கண்டு அறியாத அற்புதக் காட்சிகளையும், அனுபவித்தறியாத அற்புத அனுபவங்களையும் இதுதருணம் தொடங்கிக் கிடைக்கப்பெறுகின்றேன் என்று உணருகின்ற ஓர் சத்திய உணர்ச்சியால் பெருங்களிப்பு உடையேனாகி இருக்கின்றேன்.

நீவிர்களும் அவ்வாறு பெற்றுப் பெருங்களிப்பு அடைதல் வேண்டும் என்று எனக்குள்ளே நின்று நிறைந்து எழுந்து வெளிப்பட்ட எனது சுத்த சன்மார்க்க லக்ஷியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை பேராசை பற்றியே இதனைத் தெரிவிக்கின்றேன்.

இயற்கையிற்றானே விளங்குகின்றவராய் உள்ளவரென்றும், இயற்கையிற்றானே உள்ளவராய் விளங்குகின்றவர் என்றும், இரண்டுபடாத பூரண இன்ப அனுபவர் என்றும், எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களையும், எல்லாப் பதங்களையும், எல்லாச் சத்திகளையும், எல்லாச் சத்தர்களையும், எல்லாக் கலைகளையும், எல்லாப் பொருள்களையும், எல்லாத் தத்துவங்களையும், எல்லாத் தத்துவிகளையும், எல்லா உயிர்களையும், எல்லாச் செயல்களையும், எல்லா இச்சைகளையும், எல்லா ஞானங்களையும், எல்லாப் பயன்களையும், எல்லா அனுபவங்களையும் மற்றெல்லாவற்றையும் தமது திருவருட் சத்தியால் தோற்றுவித்தல், வாழ்வித்தல், குற்றம் நீக்குவித்தல், பக்குவம் வருவித்தல், விளக்கம் செய்வித்தல் முதலிய பெருங்கருணைப் பெருந்தொழில்களை இயற்றுவிக்கின்றவர் என்றும், எல்லாம் ஆனவர் என்றும், ஒன்றும் அல்லாதவர் என்றும், சர்வ காருண்யர் என்றும், சர்வ வல்லபர் என்றும், எல்லாம் உடையராய்த் தமக்கு ஒருவாற்றானும் ஒப்புயர்வு இல்லாத் தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதியர் என்றும் சத்திய அறிவலால் அறியப்படுகின்ற உண்மைக் கடவுள் ஒருவரே அகம், புறம் முதலிய எவ்விடத்தும் நீக்கமின்றி நிறைந்த சுத்த மெய்யறிவென்னும் பூரணப் பொது வெளியில் அறிவார் அறியும் வண்ணங்கள் எல்லாமாகி விளங்குகின்றார்.

அவ்வாறு விளங்குகின்ற ஒருவரேயாகிய கடவுளை இவ்வுலகினிடத்தே ஜீவர்கள் அறிந்து அன்பு செய்து அருளை அடைந்து

அழிவில்லாத சத்திய சுகபூரணப் பெருவாழ்வைப் பெற்று வாழாமல், பலவேறு கற்பனைகளால் பலவேறு சமயங்களிலும், பலவேறு மதங்களிலும், பலவேறு மார்க்கங்களிலும், பலவேறு லக்ஷியங்களைக் கொண்டு நெடுங்காலம் பிறந்து பிறந்து அவத்தை வசத்தர்களாகிச் சிற்றறிவும் இன்றி விரைந்து விரைந்து பலவேறு ஆபத்துகளினால் துன்பத்தில் அழுந்தி இறந்து இறந்து வீண் போகின்றார்கள்.

இனி இச்சீவர்கள் விரைந்து விரைந்து இறந்து இறந்து வீண்போகாமல், உண்மையறிவு, உண்மை அன்பு, உண்மை இரக்கம் முதலிய சுபகுணங்களைப் பெற்று நற்செய்கை உடையராய், எல்லாச் சமயங்களுக்கும், எல்லா மதங்களுக்கும், எல்லா மார்க்கங்களுக்கும் உண்மைப் பொது நெறியாகி விளங்கும் சுத்த சன்மார்க்கத்தைப் பெற்று பெருஞ்சுகத்தையும், பெருங்களிப்பையும் அடைந்து வாழும் பொருட்டு மேற்குறித்த உண்மைக் கடவுள் தாமே திருவுள்ளம் கொண்டு சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய உண்மை விளக்கம் செய்கின்ற ஓர் ஞானசபையை இங்கே தமது திருவருட் சம்மதத்தால் இயற்றுவித்து "இக்காலம் தொடங்கி அளவு குறிக்கப்படாத நெடுங்காலம் அளவு குறிக்கப்படாத அற்புத சித்திகளெல்லாம் விளங்க யாமே அமர்ந்து விளையாடுகின்றாம்" என்னும் திருக்குறிப்பை வெளிப்படுத்தி அருட்பெருஞ்ஜோதியராய் வீற்றிருக்கின்றார்.

ஆகலின், அடியிற் குறித்த தருணம் தொடங்கி வந்து வந்து தரிசிக்கப் பெறுவீர்களாகிற் கருதிய வண்ணம் பெற்றுக் களிப்படைவதும் அன்றி, இறந்தவர் உயிர்பெற்று எழுதல், மூப்பினர் இளைமையைப் பெற்று நிற்றல் முதலிய பலவகை அற்புதங்களைக் கண்டு பெருங்களிப்பும் அடைவீர்கள். இங்ஙனம்



திருச்சிற்றம்பலம்

## ஞானசபையும் நடராஜரும்



ஒரு பொருளினது நாம ரூப குணக்குற்றங்களை விசாரியாமல் அந்தப் பொருளைக் காணுதல் இந்திரியக்காட்சி, இந்திரிய அறிவு. அதன் நாம ரூபத்தையும், குணக் குற்றங்களையும் விசாரித்து அறிதல் கரணக் காட்சி, கரண அறிவு. அதன் பிரயோஜனத்தை அறிதல் ஜீவக்காட்சி ஜீவஅறிவு. அந்தப் பொருளினது உண்மையை அறிதல் ஆன்மக் காட்சி ஆன்ம அறிவு.

ஞானசபை என்பது ஆன்மப்பிரகாசம். அந்தப் பிரகாசத்திற்குள் இருக்கும் பிரகாசம் கடவுள். அந்த உள்ளொளியின் அசைவே நடனம். இவற்றைத்தான் சித்சபை அல்லது ஞானசபை என்றும், நடராஜர் என்றும், நடனம் என்றும் சொல்லுகின்றது.

# சன்மார்க்கப் பெரும்பதி வருகை

சுத்த சிவ சன்மார்க்கம் ஒன்றே இனி எல்லா உலகத்தும் வழங்கும். இதற்கு எவ்விதப்பட்ட தடைகளும் இல்லை. தடையற்ற பெருநெறி வழக்கம் இக்காலம் தொட்டு அளவிறந்த நெடுங்காலம் வரையில் வழங்கும். அதன்மேலும் அதன்மேலும் வழங்கும். பலவகைப்பட்ட சமய பேதங்களும், சாத்திர பேதங்களும், ஜாதி பேதங்களும், ஆசார பேதங்களும் போய் சுத்த சன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கம் விளங்கும். அது கடவுள் சம்மதம்.

இப்போது வருகிற நமது கடவுள் இதற்கு முன் சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பலவகைப்பட்ட ஏற்பாட்டுக் கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுளர், தேவர், அடியார், யோகி, ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல.

இப்படி சொல்லப்பட்ட எல்லா மூர்த்திகளும், எல்லாத் தேவர்களும், எல்லாக் கடவுளரும், எல்லாத் தலைவர்களும், எல்லா யோகிகளும், எல்லா ஞானிகளும் தங்கள் தங்கள் அனுபவங்களைக் குறித்து எதிர்பார்க்கின்றபடி எழுந்தருளுகின்ற தனித்தலைமைப் பெரும்பதி.

இது உண்மையாயின் அந்த பதியின் அருளை நான் பெறுவேன், பெறுகின்றேன், பெற்றேன். என்னை அடுத்த தாங்களும் பெறுதற்கு யாதொரு தடையும் இல்லை. பெறுவீர்கள், பெறுகின்றீர்கள், பெற்றீர்கள் அஞ்சவேண்டாம்.

திருச்சிற்றம்பலம்

# ஆன்மாவும் ஏழு திரைகளும்

இந்தப் பவுதிக உடம்பில் இருக்கின்ற நீ யாரெனில் நான் ஆன்மா, சிற்றணு வடிவினன். மேற்படி அணு கோடி சூரியப் பிரகாசமுடையது. லலாடஸ்தானம் இருப்பிடம். கால்பங்கு பொன்மை, முக்கால் பங்கு வெண்மை கலந்த வண்ணம். இப்படிப்பட்ட ஆன்மப் பிரகாசத்தை மறைக்க மாயா சத்திகளாகிய ஏழு திரைகளுண்டு. அவையாவன:

1. கறுப்புத் திரை - மாயாசத்தி அசுத்த மாயா சத்தி
2. நீலத்திரை - சுத்தாசுத்த மாயாசத்தி
3. பச்சைத்திரை - கிரியா சத்தி
4. சிவப்புத்திரை - பராசத்தி
5. பொன்மைத்திரை - இச்சாசத்தி
6. வெண்மைத்திரை - ஞானசத்தி
7. கலப்புத்திரை - ஆதிசத்தி

# சன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கம்



நாம் பெறும் புருஷார்த்தம் நான்கு. அவையாவன:

1. ஏமசித்தி
2. சாகாக் கல்வி
3. தத்துவ நிக்கிரகம் செய்தல்
4. கடவுள் நிலையறிந்து அம்மயமாதல்

இவற்றைப் பெறுவதற்கு ஒழுக்கங்கள் நான்கு. அவையாவன:

**1. இந்திரிய ஒழுக்கம்:**

இஃது கன்மேந்திரிய ஒழுக்கம், ஞானேந்திரிய ஒழுக்கம் என இருவகைப்படும்.

1. கொடிய சொல் செவி புகாது நாதம் முதலிய தோத்திரங்களைக் கேட்டல்.
2. அசுத்த பரிசமில்லாது தயா வண்ணமாகப் பரிசித்தல்.
3. குரூரமாகப் பாராதிருத்தல்.
4. ருசி விரும்பாதிருத்தல்.
5. சுகந்தம் விரும்பாதிருத்தல்.
6. இன்சொல்லாடல்.
7. பொய் சொல்லாதிருத்தல்.
8. ஜீவ ஹிம்சை நேரிடுங்காலத்தில் எவ்விதத் தந்திரத்தினாலாவது தடை செய்தல்.
9. பெரியோர்கள் எழுந்தருளியிருக்கும் இடங்களுக்குச் செல்லுதல்.
10. ஜீவ உபகார நிமித்தமாய் சாதுக்கள் வாசஸ்தானங்களிலும் திவ்ய திருப்பதிகளிலும் சஞ்சரித்தல்.
11. நன் முயற்சியில் கொடுத்தல் எடுத்தலாதி செய்தல்.
12. மித ஆகாரஞ் செய்தல்.
13. மித போகஞ் செய்தல்.
14. மலஜலோபாதிகளைக் கிரமமாய் கழித்தல்.
15. காலபேதத்தாலும் உஷ்ண ஆபாசத்தாலும் தடைநேர்ந்தால்

*ஔஷதி வகைகளாலும் பௌதிக மூலங்களாலும், சரபேத அஸ்தபரிச தந்திரத்தாலும், மூலாங்கப் பிரணவத்யான சங்கற்பத் தாலும் தடை தவிர்த்துக் கொள்ளல்.*

*16.(மந்தத்தரனுக்கு) சுக்கிலத்தை அக்கிரம அதிக்கிரமத்தில் விடாது நிற்றல்.*

*17.(தீவிரத்தரனுக்கு) எவ்வகையிலும் சுக்கிலம் வெளிப்படாமல் நிறுத்தல்.*

*18.இடைவிடாது கோசத்தைக் கவசத்தால் மறைத்தல்.*

*19.இதுபோல் உச்சி, மார்பு முதலிய அங்கங்களையும் மறைத்தல்.*

*20.சஞ்சரிக்குங் காலத்தில் காலில் கவசம் தரித்தல்.*

*21.அழுக்காடை உடுத்தாதிருத்தல் முதலியன இந்திரிய ஒழுக்கம்.*

**2. கரண ஒழுக்கம்**:-

1. *மனதைச் *சிற்சபையின் கண்ணே நிறுத்தல்; அதாவது முதலில் புருவ மத்தியில் நிற்கச் செய்தல்.*
2. *துர்விஷயத்தைப் பற்றாதிருக்கச் செய்தல்.*
3. *ஜீவதோஷம் (பிறர் குற்றம்) விசாரியாதிருத்தல்.*
4. *தன்னை மதியாதிருத்தல்.*
5. *இராகாதி (விருப்பு வெறுப்புகளை) நீக்கி இயற்கைச் சத்துவ மயமாதல்.*
6. *பிறர் மீது கோபியாதிருத்தல்.*
7. *தனது சத்துருக்களாகிய (எதிரிகளாகிய) தத்துவங்களை அக்கிரமத்திற் செல்லாது கண்டித்தல் முதலியன கரண ஒழுக்கம்.*

**3. ஜீவ ஒழுக்கமாவது**:-

*ஆண்மக்கள், பெண்மக்கள் முதலிய யாவர்களிடத்திலும் ஜாதி, சமயம், மதம், ஆசிரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாஸ்திர சம்பந்தம், தேசமார்க்கம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் பேதம் நீங்கி எல்லவருந் தம்மவர்களாய்ச் சமத்திற் கொள்ளுதல் ஜீவ ஒழுக்கம்.*

**4. ஆன்ம ஒழுக்கமாவது** :-

*யானை முதல் எறும்பு ஈறாகத் தோன்றிய சரீரங்களிலுள்ள ஜீவான்மாவே திருச்சபையாகவும் அதனுள் பரமான்மாவே பதியாகவும் கொண்டு யாதும் நீக்கமற எவ்விடத்தும் பேத மற்று எல்லாந் தானாக நிற்றல் ஆன்ம ஒழுக்கம்.*

இத்துடன் இடந்தனித்திருத்தல், இச்சையின்றி நுகர்தல், ஜெப தபஞ் செய்தல், தெய்வம் பராவல், பிற உயிர்க்கு இரங்கல், பெருங்குணம் பற்றல், பாடிப் பணிதல், பத்தி செய்திருத்தல் முதலிய நற்செய்கைகளில் பலகால் முயன்று முயன்று பழகிப்பழகி நிற்றல் வேண்டும்.

இவ்வண்ணம் நின்றால், மேற்குறித்த அரும் புருஷார்த்தம் கைகூடும். ஒருமை என்பது தனது அறிவு, ஒழுக்கம் ஒத்த இடத்தில் தானே கூடும்; மற்ற இடத்தில் தன்னால் இதரர்களுக்கு இம்சை இல்லாது, அவர்கள் செய்யினும் தான் சகித்து அடங்கி நிற்றல் வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

## நெஞ்சறிவுறுத்தல் தெரிந்து தெளிதல்

அந்தக்கரணம் (மனம், புத்தி, சித்தம், அகங்காரம்) நான்கில் மனம் அதிக சக்தி வாய்ந்தது என்றாலும், புத்திக்கு மனதை கட்டுப்படுத்தும் ஆற்றல் உண்டு. அதற்கு முதலில் ஜீவர்களாகிய நாம் புத்திக்கு நல்லதொரு மார்க்கத்தை காண்பிக்க வேண்டும். வாகனத்தில் பயணிக்கும் பயணி, தான் எங்கு செல்ல வேண்டும் என்பதை ஓட்டுனரிடம் தெரிவிக்க வேண்டும். அப்போதுதான் ஓட்டுனர் அந்த இலக்கை நோக்கி வாகனத்தை செலுத்துவார்.

இங்கு ஜீவர்கள் அறிவு வடிவம் என்றாலும், அறிவித்தால் அன்றி அறியாது. யாரேனும் இதுதான் நல்ல பாதை என்பதை சுட்டிக் காட்ட வேண்டும். இதற்காகவே இறையருளால் இப்பூவுலகில் அநேக குருமார்கள் தோன்றி நமக்கு நன்மார்க்கத்தை காட்டியுள்ளனர்.

அந்த வகையில் 19ம் நூற்றாண்டில் தோன்றிய நம் திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானார் ஜீவர்களாகிய நாம் உய்வடையும் பொருட்டு வகுத்துக் கொடுத்த அருமையும் எளிமையுமான பாதைதான் **சமரச சுத்த சன்மார்க்கம்.**

அவர் அருளிய திருஅருட்பாவில் “நெஞ்சறிவுறுத்தல்” எனும் தலைப்பில் நாம் இறைவனது திருவடி நிழலை அடைந்து பேரின்ப சுகத்தில் திளைத்து இன்புறும் வகையில் தனது நெஞ்சுக்கு அறிவுறுத்துவதுபோல் நமது நெஞ்சங்களுக்கு வழிகாட்டியுள்ளார். அதனையே நாம் இங்கே காணவிருக்கிறோம்.

நெஞ்சமே! நீ இதுவரை சுகம் என நினைத்திருந்த எதுவும் சுகமன்று. ஞான நூல்களில் சொல்லப்படுகின்ற வான் முதலிய தத்துவங்களைக் களைந்து ஆணவம் முதலான மூன்றில் ஒன்றையும் நாடாமல்; அவற்றோடு அமையாமல்; இரவு பகல் இன்றி உள்ளும் புறமும் ஒரே இயல்பாய்; நெருப்பும் அதன் வெப்பமும் போல அருள் வேறு தான் வேறு என்று பிரித்தறிய முடியா வண்ணம் விளங்கும் பரசிவத்தை சூழ்ந்து உறைவதே சுகமாகும்.

*அச்சுகத்தை பெறுவதற்குரிய நெறியை அறிவதற்கு எவ்வாறு இருக்க வேண்டும் என்றால், அதைக் கேள் நெஞ்சே! இப்போது இருக்கும் முறையில் இருந்தால் அஃது நிறைவேறாது.*

*சிறந்த நெறியில் நின்று பற்றற்றவனான பரமனின் பற்றையே நாம் பற்றுதல் வேண்டும். அப்படி பரமனின் திருவடியை பற்றுவதற்கு 'நான்', 'எனது' என்ற பற்று அற வேண்டும்.*

*இப்பற்று அறுதல் எவ்வாறு கைகூடும் என்றால் நெஞ்சே உலகியல் வாழ்வில் அடையும் சுகதுக்கங்களால் உண்டாகிப் பெருகும் உலகத்துப் பழக்க வாசனை நீங்குதல் வேண்டும்.*

*இந்த பழக்க வாசனை எவ்வாறு மாறுமெனில், இவ்வுலக வாசனை நம்மை தாழ்வை நோக்கியே இட்டுச் செல்லும். இது ஈன உலகம் என்று அறிந்து திருவருளை நாடுதற்குரிய ஞானம் அடைதல் வேண்டும்.*

*அந்த ஞானம் எங்ஙனம் விளங்கும் எனின், இவ்வுலகில் அனுபவிக்கப்படும் போகங்கள் பொய்யானவை என்று அறிந்து நீக்கும் நித்திய அநித்தியங்களை பாகுபடுத்தி உணரும் விவேக அறிவால் ஆகும்.*

*நெஞ்சமே! இந்நிலை எவ்வாறு ஆகுமெனில், உண்ண வந்தவன் உணவை உண்ணுவதிலேயே நாட்டம் செலுத்துவதுபோல் மெய்யைக் காண வேண்டும் என்று உற்று விசாரித்திடும் எண்ணம் வரவேண்டும். அஃது எய்தினால் அன்றி நித்திய அநித்திய விவேகம் இசைந்து வராது.*

*இந்த உற்று விசாரித்திடும் எண்ணம் ஈடேற வேண்டுமெனில், உலகியல் சேற்றில் அழுந்தியவர் கூட்டத்தைச் சேராமல் மேலான சாதுக்களின் கூட்டத்தைச் சேர்தல் வேண்டும். இது மிகவும் இன்றியமையாதது என்று நமது நெஞ்சுக்கு அறிவுறுத்துகின்றார் நம் வள்ளல். இனி இதற்கான திருஅருட்பா வரிகளைக் காண்போம்.*

**சொல்லுகின்ற**

**வானாதி தத்துவங்கள் மாய்த்து ஆண்டுறுகின்ற**
**நானாதி மூன்றிலொன்று நாடாமல் – ஆனாமை**

**எள்ளும் பகலும் இரவுமிலா ஓரிடத்தில்**
**உள்ளும் புறம்பும் ஒருபடித்தாய் – வள்ளலென**

**வாழும் பரசிவத்தின் வன்னிவெப்பம் போலமுற்றும்**
**சூழும் சுகமே சுகம் கண்டாய் – சூழ்வதனுக்கு**

**எவ்வாறிருந்தால் இயலும் எனில் அம்ம**
**இவ்வாறிருந்தால் இயலாதால் – செவ்வாற்றில்**

**பற்றற்றான் பற்றினையே பற்றியிடல் வேண்டும்அது**
**பற்றற்றால் அன்றி பலியாதால் – பற்றற்றல்**

**வேதனையால் ஈங்கு விரியும் சகப்பழக்க**
**வாதனைபோய் நீங்கிலன்றி வாராதால் – வாதனையும்**

**ஈனமந்தோ இவ்வுலகம் என்று அருளை நாடுகின்ற**
**ஞானம் வந்தால் அன்றி நலியாதால் – ஞானமது**

**போகமுற்றும் பொய்யெனவே போதும் அனித்திய**
**விவேகமுற்றால் அன்றி விளங்காதால் – ஆக அஃது**

**உண்ண வந்தால் போலும் இவண் உற்று விசாரித்திடும் ஓர்**
**எண்ணம் வந்தால் அன்றி இசையாதால் – எண்ணமது**

**பங்கமடைந்தார் அவையைப் பாராது சாதுக்கள்**
**சங்கமடைந்தால் அன்றி சாராதால்...**

இவ்வரிகளின் விளக்கச் சுருக்கத்தை ஏறு வரிசையில் கண்ணுற்றால் இன்னுமிது தெளிவாக விளங்கும்.

உலகச் சேற்றில் உழல்பவரைச் சாராது சாதுக்கள் கூட்டத்தை சேர்தல் வேண்டும்

↓

அதனால் சத்விசாரம் செய்யும் எண்ணம் உண்டாகும்

↓

அதனால் போகம் முற்றும் பொய் என்ற நித்திய அநித்திய விவேகம் உறும்

↓

அதனால் அந்தோ இவ்வுலகம் ஈன உலகம் என்று அறிந்து நம்மை பிறவியெனும் பெருங்கடலினின்றும் மேலேற்றும் திருவருளைப் பெறவதற்குரிய ஞானம் விளங்கும்

↓

அதனால் உலகப் பழக்க வாசனை மாறும்

↓

அதனால் 'நான்', 'எனது' என்ற தற்போதம் நீங்கும்

↓

இந்நிலை எய்தியபின் பற்றற்றானாகிய பரசிவத்தின் திருவடியை பற்ற முடியும்

↓

அதனால் இராப்பகல் இன்றி அருள் வள்ளலாய் விளங்கும் பரசிவத்தைச் சூழ்ந்து உறையும் சுகம் உண்டாகும்.

## உத்தரஞான சிதம்பர மாலை

குருநெறிக்கே என்னைக் கூட்டிக் கொடுத்தது கூறரிதாம்
பெருநெறிக்கே சென்ற பேர்க்குக் கிடைப்பது பொய்உலகக்
கருநெறிக்கு ஏற்றவர் காணற்கு அரியது காட்டுகின்ற
திருநெறிக்கு ஏற்கின்றது உத்தர ஞான சிதம்பரமே.

## சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்கள்

**நானுரைக்கும் வார்த்தைஎலாம் நாயகன்தன் வார்த்தை**
**நம்புமினோ நமரங்காள் நற்தருணம் இதுவே – வள்ளலார்**

சுத்த சன்மார்க்கத்திற்கு முக்கிய தடைகளாகிய சமயம், மதம் முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றறக் கைவிட்டவர்களும், காமக் குரோதம் முதலியவைகள் நேரிட்ட காலத்தில் ஞான அறிவினால் தடுத்துக் கொள்பவரும், கொலை புலை தவிர்த்தவர்களும் ஆகிய இவர்கள்தான் சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்கள் ஆவார்கள்.

மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் இவை முதலியவைகளைத் தவிர்த்துக் கொள்வார்கள். அதாவது, செயற்கையாகிய குணங்களை நன்முயற்சியால் தடுத்துக் கொள்பவர்களுக்குக் கேவலாதிகார மரணம் நீங்கும்.

அப்படி இல்லாது இவ்விடம் காத்திருப்பவர்கள் மரணத்தைத் தவிர்த்துக் கொள்ள மாட்டார்கள். அருள் விளங்கும் காலத்தில் அவரவர்கள் பரிபாகத்துக்குத் தக்கதாக இகலோக போகத்தை மட்டும் அனுபவிக்கக்கூடும்; பரலோக போகமாகிய ஞானசித்திகளைப் பெறமாட்டார்கள்.

**...திருச்சிற்றம்பலம்...**

## ஜீவகாருண்யமும் சித்தியும்

நம்முடைய தலைவராகிய கடவுளை நாம் அடைவதற்கு அவர் எழுந்தருளியிருக்கும் கோட்டையின் சாவியாகிய அருள் வேண்டும். அவ்வருள் அன்பினால் அல்லது வேறு வகையில் அடைவது அரிது. இவ்வன்பு ஜீவகாருண்யத்தால் அல்லது வேறு வகையில் வராது. ஜீவகாருண்யத்தின் லாபமே அன்பு.

இந்த ஜீவகாருண்யம் உண்டாவதற்கு ஏது அல்லது துவாரம் யாதெனில் கடவுளுடைய பெருமையையும் தரத்தையும், நம்முடைய சிறுமையையும் தரத்தையும் ஊன்றி விசாரித்தலே. அன்னிய உயிர்களுக்கு இம்சை உண்டாகாது நடத்தலே ஜீவகாருண்யம். இதுதான் முத்தியடைவதற்கும் சித்தியடைவதற்கும் முதற்படியாய் இருக்கின்றது. ஆதலால் இதைப் பாதுகாத்தல் வேண்டும்.

**Advertisement**


## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அனுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

திருவருள் துணையுடன்

BNS

Wings of Wisdom

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

**Books for All Ages**

| Unlimited Books Starts @ INR 1200/. | |
|---|---|
| Scheme | Books at a Time |
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |
| Door Delivery Available* | |

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.

# % may change based on books popularity, availablity and price

# SOULFUL HOME

**Schemes starts @ INR 2400/=**

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



## Key advantages

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

AYYAPPAN THANGAL 26792007 / VALASARAVAKKAM 42105700 / PORUR 42107304 / OMR 42863478 / VADAPALANI 42642491



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

Suriyaa Digital
Porur - 9677227755

ஆன்மீகத்தில் தாகம் கொண்ட சாதகன் அவசியம்
அறிந்து கொள்ள வேண்டிய உண்மைப் பொது நெறி



# அருள் நெறி



அருள்நெறி ஒன்றே தெருள்நெறி மற்றெலாம்
இருள் நெறிஎன எனக்கு இயம்பிய சிவமே – அகவல்

கடவுளது திருவருளை எவ்வாறு பெறக்கூடும்? அருளென்பது கடவுள் தயவு. ஜீவகாருண்யம் என்பது ஜீவர்கள் தயவு. ஆதலால் சிறு வெளிச்சத்தைக் கொண்டு பெரு வெளிச்சத்தைப் பெறுவதுபோல், சிறிய தயவாகிய ஜீவ தயவைக் கொண்டு பெருந்தயவாகிய கடவுளருளைப் பெறவேண்டும்.

அக் கடவுள் தயவாகிய அருள் எத்தன்மை யுடையது? நமது ஆன்ம அறிவாகிய புத்தி தத்துவத்திற்கு நன்மை தீமையை விளக்கிக் காட்டுவதாயும், வேதாகம கலைகளைக் கொண்டு நன்மையாதிகளை விதிப்பதாயும், அறிபவர்களின் தரத்திற் கொத்ததாயும், அறிபவர்கள் எந்த வஸ்துவை அறிகின்றார்களோ அந்த வண்ணமாயும் உள்ளது.

அத்தன்மையான அருள் பிண்ட அண்டத்தில் எவ்வண்ணமாய் விளங்குகின்றது? காண்பார் காணுமிடம் காணப்படுமிடம், அறிவார் அறியுமிடம் அறியப்படுமிடம், தூண்டுவார் தூண்டுமிடம் தூண்டப்படுமிடம், சுவைப்பார் சுவைக்குமிடம் சுவைக்கப்படுமிடம், அனுபவிப்பார் அனுபவிக்குமிடம் அனுபவிக்கப்படுமிடம், கருதுவார் கருதுமிடம் கருதப்படுமிடம், முகருவார் முகருமிடம் முகரப்படுமிடம், கேட்பார் கேட்குமிடம் கேட்கப்படுமிடம் முதலியவாய் விளங்கும்.

**இவ்வண்ணம் விளங்கும் அருளை நாம் பெறுவதற்கு உபாயம் என்ன?**

புத்தி தத்துவத்தால் நன்மை தீமையை விசாரித்து, நன்மையே உருவாய் விளங்கும் பெரியோரைத் துணைக்கொண்டு, அவரால் கட்டளையிடும் திருப்பணியைக் கைக்கொண்டு இடையறாது செய்யில், அவ்வருளைப் பெறலாம்.

**நன்மை தீமை என்பவை யாவை?** நன்மை தீமை யென்பவை புண்ணிய பாவம். புண்ணியமென்பது ஆரம்பத்தில் செய்வதற்கும்

அனுபவிப்பதற்கும் முயற்சிப்பதற்கும் துக்கமாயும், பின் சுகமாயும் விளங்கும். பாவமென்பது ஆரம்பத்தில் சுகமாயும் பின் துக்கமாயும் இருக்கும்.

**புண்ணிய பாவங்கள் நம்மை எவ்வாறடைகின்றன?**

மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் அடையும். மேலும், மனத்தினிடத்தில் நால்வகையும், வாக்கினிடத்தில் நால்வகையும், சரீரத்தினிடத்தில் நால்வகையும், ஆகப் பன்னிரண்டு வகையாய் நம்மையடையும். அவையாவன;

**மனத்தினால் வரும் பாவம்**

1. பிறர் மனைவியை தனதாக நினைத்தல்.
2. அன்னியருடைய சொத்தை கிரகிக்க நினைத்தல்.
3. அன்னியருக்குத் தீங்குசெய்ய நினைத்தல்.
4. முடியாத காரியங்களை நினைத்து அக்காரியம் அன்னியர்களுக்கு முடிந்ததை நினைத்துப் பொறாமையடைதல்.

இவை நான்கும் மனத்தினால் செய்யும் பாவங்கள்.

**வாக்கினால் வரும் பாவம்**

1. பொய்சொல்லல்.
2. புறங்கூறல்.
3. கோட்சொல்லல்.
4. வீணுக்கழுதல்.

இவை நான்கும் வாக்கினால் உண்டாகும் பாவங்கள்.

**தேகத்தினால் வரும் பாவம்**

1. பிறர் மனைவியை தழுவுதல்,
2. புசிக்க தகாத வேத விரோத ஆகாரங்களைப் புசித்தல்,
3. அன்னியர்களை இம்சை செய்தல்,
4. தீங்குசெய்கின்றவர்களைத் தடுக்காமல் அவர்களுக்கு உபகாரஞ் செய்தல்

இந்நான்கும் தேகத்தாலுண்டாகும் பாவங்கள்.

**மனத்தினால் வரும் புண்ணியம்**

1. அன்னியர்களுக்கு நன்மை உண்டாக நினைத்தல்,
2. பொறாமை அடையாதிருத்தல்,
3. அன்னியர் சொத்தைத் தனதாக்க எண்ணாதிருத்தல்,
4. தனது மனைவியை தவிர அன்னியமான பெண்களைத் தாய், சகோதரி முதலியவர்களாகச் சிந்தித்தல்

இவை நான்கும் மனத்தால் வரும் புண்ணியங்கள்.

**வாக்கினால் வரும் புண்ணியம்**

1. பொய்சொல்லாமை,
2. கோட்சொல்லாமை,
3. இன்சொல்லாடல்,
4. தோத்திரம் செய்தல்

இவை நான்கும் வாக்கினா லுண்டாகும் புண்ணியங்கள்.

**தேகத்தினாலுண்டாகும் புண்ணியங்கள்**

அன்னியர்களுக்கு தீங்குண்டாகுங்கால் விலக்கல் முதலிய நன்மையான கிருத்தியங்கள் செய்தல். இவை தேகத்தால் உண்டாகும் புண்ணியம்.

**அறிந்து செய்த பாவங்களும் அறியாது செய்த பாவங்களும் எவ்வாறு நீங்கும்?**

அறிந்து பாவங்கள் செய்தபின், தனக்குப் பாவம் செய்ததாக எவ்வகையிலாவது தெரிந்தபின், "நாம் பாவச் செய்கையை முன்னமே தெரிந்தும், மோகத்தாலும், மறதியாலும், அபிமானத்தாலும், அகங்காரத்தாலும், செல்வச் செருக்காலும், தாட்சண்ய உடன்பாட்டாலும், உணவு பற்றியும், புகழ் பற்றியும், வழக்கம் பற்றியும் செய்து விட்டோமே!'' என்று பச்சாத்தாபப்பட்டுப் பெரியோர்களையடுத்து, அவர்களால் நியமனம் செய்யப்படும் பிராயச்சித்தங்களைக் கைக்கொண்டு, அவ்வண்ணம் இச்சரீரத்தைத் தவத்தாலும் விரதத்தாலும் இளைக்கச் செய்வதுமன்றி; யாத்திரையாதிய மேற்கொண்டு, புண்ணிய ஸ்தலங்களிற் சென்று வசித்து, இயன்ற அளவில் அன்ன விரயஞ் செய்தால் நீங்கும். மேலும் சத்தியற்றவர்களாயும், வார்த்திகர்களாயும் உள்ளவர்கள் மகான்களுக்குத் தொண்டு செய்தால் நீங்கும் மகான்கள் நேரிடாத பக்ஷத்தில், பச்சாத்தாபத்துடன் பாவ காரியங்களைச் செய்யாமலும், பாவிகளுடைய கூட்டத்தில் பழகாமலும், திருவருளைச் சிந்தித்து அவர்கள் தரத்திற் கொத்த தெய்வங்களைச் சிந்தித்துக் கொண்டிருந்தால் நீங்கும்.

**அறியாத பாவங்கள் யாவெனில்,** நடக்குங் காலத்திலும், நீராடுங் காலத்திலும், சயன காலத்திலும், தனக்குத் தோன்றாமல் நேரிடும் பாவங்களாம். இதன்றி அவை மனத்திற்குப் புலப்படாமலும் உண்டாகும். இவைகள் யாவும் தினஞ் செய்யுஞ் ஜபத்தாலும், பாராயணத்தாலும், ஸ்தோத்திரத்தாலும், விருந்துபசரித்தலாலும், தெய்வம் பராவலாலும் நீங்கும்.

**பிராயச்சித்தம் முதலியவைகள் செய்யாவிட்டால் பாவங்களாலடையுங் கதி யென்ன?**

*மனத்தால் செய்யும் பாவங்கட்குச் சண்டாளாதி சரீரமுண்டாகும். வாக்காற் செய்த பாவங்கட்கு மிருகம் முதலான சரீரமுண்டாகும். தேகத்தால் செய்யும் பாவங்கட்கு மரம் முதலான சரீரமுண்டாகும்.*

**வேதாந்திகள் "பாவம் முதலிய கருமங்களும், புண்ணியம் முதலிய ஏதுக்களும் நமக்கில்லை, நாம் சர்வசாக்ஷி" என்கின்றார்களே அஃதென்ன?**

*தேகவாசனை, இந்திரியவாசனை, கரண வாசனை, பிராண வாயுவின் செயற்கையிலுண்டாகும் வேறுபாடு முதலிய நன்மைகளில் சலிப்பற்று ஆகாரம், நித்திரை, பயம் முதலியவைகளில் தாம் சலித்தும் சோர்ந்தும் திடுக்கிட்டும் இல்லாமல், நிவாத தீபம் போல் விளங்கும் ஜீவன்முத்தர்கள் சமூகத்தில் பாவ கிருத்தியங்கள் நடவா; புண்ணியங்களும் பிரயோஜனம் பற்றிச் செய்யார்கள்; பொன்னும் ஓடும் சரியாகக் (சமமாகக்) காண்பார்கள். அத்தன்மை உடைய நித்திய முத்த சுத்த ஞான தேக சித்தர்கட்குப் பாவ புண்ணியம் இல்லை என்று அவர்கள் சொல்ல வேண்டியதில்லை. நமக்கே தெரியும்.*

*மேலும், அவர்கள் இந்தப் பவுதிக சரீரத்தில் வசித்தாலும், சரீரமாகிய தத்துவ தாத்விகங்கள் இப்போது நமக்கு அசுத்த தேகமாயும், அசுத்தப் பொறியாயும், அசுத்தக் கரணமாயும், அசுத்த அனுபவமாயும், அசுத்த அறிவாயும் இருப்பதுபோல் இரா. தத்தபடத்தைப் போல் காரியத்தில் இலதாயும், காரணத்தில் உளதாயும் அறிவே வடிவாய், அறிவே பொறியாய், அறிவே மனமாய், அறிவே அழகாய், அறிவே உருவாய், அறிவே உணர்வாய், அறிவே அனுபவமாய், அறிவே அறிவாய் விளங்கும்.*

காய்ந்த கட்டையினிடத்தில் அக்கினி அதிசீக்கிரம் பற்றுதல்போல், பக்குவர்களாகிய ஜீவர்களிடத்தில் கடவுள் அருள் வெளிப்பட்டால் சுத்தமாதி மூன்று தேகசித்தியும் அத்தருணமே வரும். பக்குவமில்லாதவர்க்கு அருள் செய்தாலும் வாழையினிடத்தில் அக்கினி செல்வது போலாம். ஆதலால், கடவுள் அருள் வெளிப்படுவதற்கு முன் அபக்குவர்கள் தங்கள் செயற்கையாகிய ராகத்துவேஷாதி அசுத்தங்களை (விருப்பு வெறுப்புக்களை) போக்கிக் கொள்வது உத்தமம்.

*திருச்சிற்றம்பலம்*

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

# தாமச ஆகாரமும் சாத்வீக ஆகாரமும்

**கொல்லா நெறியே குருவருள் நெறியென**
**பல்கால் எனக்குப் பகர்ந்த மெய்ச்சிவமே – அகவல்**

**கொலை என்பது தேகத்தின் அகத்தும் புறத்தும் உள்ள கருவி கரணங்களைப் பல்வேறு கருவி கரணப் புடைப்பெயர்ச்சிகளால் பதைப்புண்டாகக் கலகம் செய்து அறிவை மெலிவித்து ஆன்மாவை வெளிப்படுத்துவித்தற்கு நிமித்தமாகிய விகற்ப பூத காரியக் கொடுந்தொழில்.**

*எல்லா ஜீவர்களும் இயற்கை உண்மை ஏகதேசங்களாகிக் கடவுள் இயற்கை விளக்கமாகிய அருளுக்கு இடமாக இருக்கின்றது.*

*கடவுள் இயற்கை விளக்கம் (அருள்) மறைபடும்போது ஜீவத்தன்மை இல்லாதபடியால், கடவுள் இயற்கை விளக்கமும் ஜீவன் இயற்கை விளக்கமும் (தயவு) ஒன்றோடு ஒன்று மாறுபடாதது.*

*கடவுள் இயற்கை விளக்கமும், ஜீவன் இயற்கை விளக்கமும் அந்தந்தத் தேகங்களிலும் விளங்குகின்றது.*

*எனவே ஒரு ஜீவனைக் கொன்று ஒரு ஜீவனுக்கு மாமிசத்தால் பசியாற்றுதல் ஜீவகாருண்ய ஒழுக்கமே அல்ல என்றும், கடவுள் சம்மதமும் அல்ல என்றும், இயற்கைக்கு முழு விரோதம் என்றும் அறியவேண்டும். மேலும் ஒரு ஜீவனைக் கொன்று அதன் மாமிசத்தை உண்பது தாமச ஆகாரமாகும். எப்படியெனில்,*

**கடவுள் விளக்கம் வெளிப்படாதபடி ஆன்ம விளக்கத்தை மறைத்த இம்சை ஆகாரம் ஆதலால் மாமிசம் தாமச ஆகாரம் ஆயிற்று.**

*ஆனால் மரம், புல், நெல் முதலான ஜீவர்கள் பரிசம் என்கிற ஓரறிவு உடையவை. அவ்வுடம்பில் ஜீவ விளக்கம் ஒருசார் விளங்குகின்றது.*

*அவ்வுயிர்கள் தோன்றும் வித்துக்களும் மற்ற வித்துக்கள் போல் சடமே. அவ்வித்துக்களை நாமே உயிர் விளைவு செய்யக்கூடும்.*

*சுக்கிலம், நகம், ரோமம் முதலானவைகளை வாங்கும்போது இம்சை உண்டாகாமை போல், உயிர் தோன்றற்கு இடமான சடங்களாகத் தோன்றிய வித்து, காய், கனி முதலானவை கொள்ளும்போது இம்சை உண்டாகாது.*

*மேலும், தாவர வர்க்கங்களுக்கு மனம் முதலான அந்தக்கரண விருத்தி இல்லை. தத்துவ விருத்தியும், தாது விருத்தியும் இல்லாதபடியால் அது அசுத்தமும் அல்ல. எனவே தாவரங்களை உண்பது உயிர்க்கொலை அல்ல. ஜீவகாருண்யத்திற்கு விரோதமும் அல்ல. எனவே தாவர உணவு சாத்வீக உணவு.*

திருச்சிற்றம்பலம்

# சுத்த சன்மார்க்க சத்திய சிறுவிண்ணப்பம்

## கடவுள் தயவும் ஜீவ சரித்திரமும்

இயற்கை உண்மையரென்றும், இயற்கை அறிவினரென்றும், இயற்கை இன்பினரென்றும், நிர்க்குணரென்றும், சிற்குணரென்றும், நித்தியரென்றும், சத்தியரென்றும், ஏகரென்றும், அனேகரென்றும், ஆதியரென்றும், அனாதியரென்றும், அமலரென்றும், அருட்பெருஞ்ஜோதிரென்றும், அற்புதரென்றும், நிரதிசயரென்றும், எல்லாம் வல்லவரென்றும், எல்லாம் உடையவரென்றும், எல்லாம் வல்லவரென்றும், குறிக்கப்படுதல் முதலிய அளவு கடந்த திருக்குறிப்புத் திருவார்த்தைகளால் சுத்த சன்மார்க்க ஞானிகள் துதித்தும், நினைத்தும், உணர்ந்தும், புணர்ந்தும் அனுபவிக்க விளங்குகின்ற தனித்தலைமைப் பெரும்பதியாகிய பெருங்கருணைக் கடவுளே! தேவரீர் சிற்றறிவால் செய்து கொள்ளும் சிறு விண்ணப்பங்களைத் திருச்செவிக்கு ஏற்பித்தருளி எங்களை இரக்ஷித்தருளல் வேண்டும்.

எல்லாச் சத்திகளும், எல்லாச் சத்தர்களும், எல்லாத் தலைவர்களும் அறிந்து கொள்ளுதற்கு மிகவும் அரியதாய்; எல்லாத் தத்துவங்களுக்கும் எல்லாத் தத்துவிகளுக்கும் அப்பால் அப்பாலாய் விளங்கும் ஓர் சுத்த ஞான வெளியில் தனக்கு ஒருவிதத்தாலும் ஒப்புயர்வு சிறிதும் குறிக்கப்படாத தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதியராகி விளங்குகினற் தேவரீரது தனிப்பெரும் தன்மைக்கு மெய்யறிவுடையோரால் வித்திக்கப்பட்ட வேதாகமங்களும் பெருந்தகை வாசகத்தைப் பெறாது சிறுதகை வாசகங்களைப் பெற்றுத் திகைப்படைகின்றன என்றால், மலத்தில் புழுத்த புழுவினும் சிறியேமாகிய யாங்கள் திருச்சமுகத்தில் விண்ணப்பித்தற்குரிய பெருந்தகை வாசகத்தை எவ்வாறு அறிவோம்! எங்ஙனம் செய்வோம்! ஆகலில், கருணாநிதியாகிய கடவுளே! யாஙகள் விண்ணப்பிக்கின்ற அற்ப வாசகத்தில் உரிமை நோக்காது அங்கீகரித்தருளி எங்களைக் காத்தருளல் வேண்டும்.

தாயினும் சிறந்த தயவுடைக் கடவுளே!

இயற்கையே அஞ்ஞான இருளில், அஞ்ஞான உருவில், அஞ்ஞானிகளாய், அஞ்ஞானத்தில் பயின்று ஏதும் தெரியாது கிடந்த எங்களைத் தேவரீர் பெருங் கருணையால் பவுதிக உடம்பில் சிறிது அறிவு தோற்றி விடுத்த அஞ்ஞான்று தொட்டு இஞ்ஞான்று வரையும் அது கொண்டு அறிவே வடிவாய், அறிவே உருவாய், அறிவே பொறியாய், அறிவே மனமாய், அறிவே அறிவாய், அறிவே அனுபவமாய் அனுபவிக்கத் தெரிந்துகொள்ளாது, குற்றமே வடிவாய்,

குற்றமே உருவாய், குற்றமே பொறியாய், குற்றமே மனமாய், குற்றமே அறிவாய், குற்றமே அனுபவமாய் அனுபவிக்கின்ற சிறியேங்கள் திருச்சமுகத்தில் விண்ணப்பிக்கின்ற விண்ணப்பமும் குற்றமே வடிவாய்க குற்றமே குறிக்கும் என்று அறிந்தோமாயினும், குற்றம் குறியாத வகை விண்ணப்பம் செய்தற்கு ஒருவாற்றானும் உணர்ச்சியில்லேம் ஆதலின், துணிவு கொண்டு விண்ணப்பிக்கின்றோம். குற்றங்களையே குணங்களாகக் கொள்ளுதல் தேவரீர் திருவருள் பெருமைக்கு இயற்கையாதலின் இவ்விண்ணப்பங்களில் குற்றம் குறியாது கடைக்கணித்தருளிக் கருணை செய்தல் வேண்டும்.

அஞ்ஞான இருளில் ஒன்றும் தெரியாது உணர்ச்சியின்றிக் கிடந்த காலம்போக, அவ்விருளை விட்டு நீங்கிய காலத்தே, இவ்வுலகினிடத்து

புல், நெல், மரம், செடி, பூடு முதலியவாகவும் கல், மலை, குன்று முதலியவாகவும் பிறந்து பிறந்து களையுண்டல், வெட்டுண்டல், அறுப்புண்டல், கிள்ளுண்டல், உலர்ப்புண்டல், உடைப்புண்டல், வெடிப்புண்டல் முதலிய பலவேறு அவத்தைகளால் இறந்து இறந்து **அத்தாவரயோனி வர்க்கங்களெல்லாம்** சென்று சென்று, உழன்று உழன்று அலுப்படைந்தோம்.

பின்னர் எறும்பு, செல், புழு, பாம்பு, உடும்பு, பல்லி முதலியவாகவும் தவளை, சிறுமீன், முதலை, சுறா, திமிங்கிலம் முதலியவாகவும் பிறந்து பிறந்து தேப்புண்டல், நசுக்குண்டல், அடியுண்டல், பிடியுண்டல் முதலிய பலவேறு அவத்தைகளால் இறந்து இறந்து **அவ்வூர்வன நீர்வாழ்வன யோனி வர்க்கங்களெல்லாம்** சென்று சென்று, உழன்று உழன்று அலுப்படைந்தோம்.

பின்னர் ஈ, வண்டு, தும்பி, குருவி, காக்கை, பருந்து, கழுகு முதலியவாகப் பிறந்து பிறந்து அடியுண்டல், பிடியுண்டல், அலைப்புண்டல், உலைப்புண்டல் முதலிய பலவேறு அவத்தைகளால் இறந்து இறந்து அப்**பறவையோனி வர்க்கங்கள்** எல்லாம் சென்று சென்று, உழன்று உழன்று அலுப்படைந்தோம்.

பின்னர் அணில், குரங்கு, நாய், பன்றி, பூனை, ஆடு, மாடு, யானை, குதிரை, புலி, கரடி முதலியவாகப் பிறந்து பிறந்து பிடியுண்டல், அடியுண்டல், குத்துண்டல், வெட்டுண்டல், தாக்குண்டல், கட்டுண்டல், தட்டுண்டல் முதலிய பலவேறு அவத்தைகளால் இறந்து இறந்து அவ்**விலங்குயோனி வர்க்கங்கள்** எல்லாம் சென்று சென்று, உழன்று உழன்று அலுப்படைந்தோம்.

பின்னர் பைசாசர், பூதர், ராக்கதர், அசுரர், சுரர் முதலியராகப் பிறந்து பிறந்து அலைப்படுதல், அகப்படுதல், அகங்கரித்தல், அதிகரித்தல், மறந்து நிற்றல், நினைந்து நிற்றல், மயக்குறுதல்,

*திகைப்புறுதல், போரிடுதல், கொலைபடுதல் முதலிய பலவேறு அவத்தைகளால் இறந்து இறந்து அத்***தேவயோனி வர்க்கங்கள்** *எல்லாம் சென்று சென்று, உழன்று உழன்று அலுப்படைந்தோம்.*

*பின்னர் காட்டகத்தார், கரவு செய்வார், கொலை செய்வார் முதலியராகப் பிறந்து பிறந்து பயப்படல், சிறைப்படல், சிதைபடல் முதலிய அவத்தைகளால் இறந்து இறந்து அந்***நரகயோனி வர்க்கங்கள்** *எல்லாம் சென்று சென்று, உழன்று உழன்று அலுப்படைந்தோம்.*

*அங்ஙனம் யாங்கள் அப்பிறவிகள்தோறும் அடைந்த அலுப்பும், அச்சமும், அவலமும், களைப்பும், துன்பமும் திருவுளத்தடைத்து இரங்கியருளி* **அழியாப் பெருவாழ்வைப் பெறுதற்குரிய உயர் அறிவுடைய இம்மனித தேகத்தில்** *செலுத்தி அருளிய தேவரீரது பெருங்கருணைக்கு யாங்கள் செய்யும் கைம்மாறு ஒன்றும் தெரிந்தோமில்லை.*

**உயிர்களின் அகத்தும், புறத்தும், அகப்புறத்தும், புறப்புறத்தும் நீக்கமின்றி நிறைந்து விளங்குகின்ற அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே!**

*இம்மனித தேகத்தில் செலுத்திய காலத்திலும் தாய் வயிற்றிலும், சிசுப்பருவத்திலும், குமாரப் பருவத்திலும் பலவேறு அவத்தைகளால் அறிவின்றி இருந்தோமாகலில், தேவரீர் பெருங்கருணைத் திறத்தை அறிந்து கொள்ளாமல் வீண்போது கழித்தோம்.*

*அப்பருவம் கழிய இப்பருவத்தினிடத்தே எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களையும், எல்லா உயிர்களையும், எல்லாப் பொருள்களையும் மற்றை எல்லாவற்றையும் தோற்றுவித்தும், விளக்கம் செய்வித்தும், துரிசு நீக்குவித்தும், பக்குவம் வரவித்தும், பலன் தருவித்தும் எங்கும் பூரணராகி விளங்குகின்ற ஓர் உண்மைக் கடவுள் உண்டென்றும், அக்கடவுளை உண்மை அன்பால் கருத்தில் கருதி வழிபாடு செய்யின் அக்கடவுள் திருவருள் நமது கருத்தின்கண் வெளிப்பட்டு விளங்கும் என்றும், அத்திருவருள் விளக்கத்தால் மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகள் எல்லாவற்றையும் தவிர்த்து எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வை அடைதல் கூடும் என்றும் எங்கள் அறிவில் தேவரீர் திருவருளால் உண்மைப்பட உணர்த்தி அருளப்பெற்றோம்.*

*அவ்வுணர்ச்சியை பெற்றது தொடங்கி கடவுள் வழிபாடு எஞ்ஞான்று செய்வோம்? கடவுள் திருவருள் விளக்கம் எந்நாள் அடைவோம்? மரணம், பிணி, மூப்பு முதலிய அவத்தைகள் எப்போது நீங்கும்? என்று எண்ணியெண்ணி வழி துறை தெரியாது வருந்துகின்ற தருணத்தே*

**களைப்பறிந்து உதவும் கருணைக் கடலாகிய கடவுளே!** தேவரீர் 'நெடுங்காலம் மரணம் முதலாகிய அவத்தைகளால் துன்பமுற்று

களைப்படைந்த உங்களை அவ்வவத்தைகளினின்றும் நீக்கி களைப்பும் கலக்கமும் தவிர்த்து அழியாத பேரின்ப சித்தியை அடைவித்தற் பொருட்டாகவே பூர்வஞான சிதம்பரத்தின் வடபால் பார்வதிபுரமென்று குறிக்கப்படுகின்ற உத்தரஞான சித்திபுரத்தில் யாம் அளவு கடந்த நெடுங்காலம் சித்தியெல்லாம் விளங்கத் திருவருள் நடம் செய்வோம்' என்றும் 'அது தருணம் மிகவும் அடுத்த சமீபித்த தருணம்' என்றும் 'அப்பதியினிடத்தே யாம் அருள் நடம் புரிதற்கு அடையாளமாக ஓர் ஞானசபை காணுதல் வேண்டும்' என்றும் திருவருட் குறிப்பால் அறிவித்ததுமன்றி, அருள் உருவாகி எங்கள் அகத்தும், புறத்தும் அமர்ந்தருளி யாதோர் தடைகளும் இன்றி அத்திருஞானசபையும் தோன்றி விளங்கச் செய்வித்தருளிய தேவரீர் பெருங்கருணையைக் கருதுந்தோறும் பெருங்களிப்படைகின்றோம். இனி அத்திருஞானசபையை அலங்கரித்தல் வேண்டுமெனக் குறிப்பித்த வண்ணம் அலங்கரிக்கத் தொடங்குகின்றோம்.

**அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே!** தேவரீர் அருள் உருவாகி எங்கள் அகத்தும், புறத்தும் அமர்ந்தருளி யாங்கள் செய்யும் இவ்வலங்காரத் திருப்பணியில் எவ்விதத்தாலும், யாதொரு தடையும் வாராத வண்ணம் செய்வித்து அவ்வலங்காரத் திருப்பணியை முற்றுவித்து அருளல் வேண்டும்.

**சர்வ வல்லபராகிய தனித்தலைமைக் கடவுளே!** அத்திருஅலங்காரத் திருப்பணி முற்றிய தருணத்தே தேவரீர் அமர்ந்தருளி அற்புதத் திருவருள் விளக்கத்தால் எங்களையும் இவ்வுலகில் இத்தேகத்தைப் பெற்ற மற்றவர்களையும் உண்மை அடியர்களாக்கி, உண்மை அறிவை விளக்கி, உண்மை இன்பத்தை அளித்து சமரச சுத்த சன்மார்க்க நிலையில் வைத்து சத்திய வாழ்வை அடைவித்து நித்தியர்களாக்கி வாழ்வித்தல் வேண்டும்.

**எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே!** இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடையாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும் வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனத்தில் பற்றாத வண்ணம் அருள் செய்தல் வேண்டும்.

சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்து அருளல் வேண்டும்.

**எல்லாமாகிய தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே! தேவரீர் திருவருட் பெருங்கருணைக்கு வந்தனம்! வந்தனம்!**

# மகாமந்திரத் திருவாக்கியம்

இத்தருணம் ஆண்டவர் எல்லாவற்றையும் நீக்கி, எல்லோரும் மேலான இன்பத்தை அடையும் பொருட்டு முடிவான இன்பானுபவத்திற்குச் சாதக சகாயமான திருவருள் மகாவாக்கியத் திருமந்திரத்தை தமது உண்மையை வெளிப்படக் காட்டும் மகாமந்திரத் திருவாக்கியத்தை எனக்கு வெளியிட்ட அவ்வண்ணம், எனது மெய் அறிவின்கண் அனுபவித்து எழுந்த உண்மையறிவு அனுபவானந்த இன்பத்தை நீங்கள் எல்லவரும் என்போல் ஐயம், திரிபு, மயக்கம் இன்றி அடைய என்னுள்ளே எழுந்து பொங்கிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையைப் பற்றிக் குறிப்பித்தேன் குறிப்பிக்கின்றேன் குறிப்பிப்பேன்.

நமது ஆண்டவர் கட்டளையிட்டது யாதெனில் நமக்கு முன் சாதனம் கருணையானதினாலே, ஆண்டவர் முற்சாதனமாக

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி**

என்னும் திருமந்திரத்தை வெளிப்படையாக எடுத்துக் கொண்டார். தயவு, கருணை, அருள் என்பவை ஒரு பொருளையே குறிக்கும். ஆதலால் பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பமாம். அது ஒப்பற்ற பெருந்தயவுடைய பேரறிவேயாம். இஃது வாச்சியார்த்தம். இவ்வண்ணம் சாதனம் முதிர்ந்தால் முடிவான இன்பானுபவம் பெறுவதற்குத் தடையில்லை. “சந்தமும் வேதமொழி யாதொன்று பற்றின் அதுதான் வந்து முற்றும்” என்னும் பிரமாணத்தால் உணர்க.

மேலும், இதுகாறும் தெய்வத்தின் உண்மையைத் தெரியவொட்டாது அசுத்த மாயாகாரிகளாகிய சித்தர்கள் மறைத்துவிட்டார்கள். சுத்த மாயாகாரியாகிய தெரிந்த பெரியோரும் இல்லை. சன்மார்க்கமும் இல்லை. சன்மார்க்கம் இருந்தால் அனுபவித்தறியாத அனுபவமும் கேட்டறியாத கேள்வியும் நாம் கேட்டிருப்போம். மேலும் இறந்தவர்கள் மீளவும் எழுந்து வந்திருப்பார்கள். ஆதலால் கேட்டறியாத கேள்விகளைக் கேட்கும்படி ஆண்டவர் செய்தது இத்தருணமே. ஆதலால் இத்தருணம் **இக்காலமே சன்மார்க்கக் காலம்.**

திருச்சிற்றம்பலம்

## மனிதப் பிறப்பின் மாண்பும் கடமையும்

மனித தேகம் மற்ற ஜீவதேகம் போல இலேசிலே எடுக்க முடியாது.

மனித தேகத்தில் ஆன்ம விளக்கமும் அருள் விளக்கமும் மிகவும் விளங்குகின்றது.

இந்த மனித தேகம் போனால் மீளவும் இந்தத் தேகம் வரும் என்கிற நிச்சயமில்லை.

இந்த மனித தேகம் முத்தியின்பம் பெறுதற்கே எடுத்த தேகமாகும்.

இந்த மனித தேகம் மாத்திரமே முதல் சிருஷ்டி தொடங்கிக் கடவுள் சம்மதத்தால் சிருஷ்டிக்கப்பட்ட உயர்ந்த அறிவையுடைய தேகமாகும்.

இதனால் ஜீவகாருண்ய ஒழுக்கம் மனிதர்களிடத்தே பெரும்பான்மை நடத்த வேண்டும் என்று அறிய வேண்டும்.

## ஆன்ம இயற்கையாகிய தயாமூல தர்மம்

தர்மம் என்பதற்குப் பொருள் ஜீவ தர்மம், குலதர்மம், சாஸ்திர தர்மம், ஆசார தர்மம், ஆசிரம தர்மம், சாதி தர்மம் முதலியவாக விரியும். இதில் அதி நுண்மை அதின் தன்மை... தன்மை என்பது அதின் சுபாவம். சுபாவமென்பது இயற்கைக் குணம். தயை என்பது ஆன்மா. ஆதலால், ஆன்மாவிற்கு இயற்கைக் குணம் தயை. ஆன்மாவின் இயற்கை என்பதே தர்மத்திற்குப் பொருள். ஆன்மா இயற்கையோடு இருந்தால் சிவமாகலாம்.

இதைப் பலவாக தர்மம் என்று பெயரிட்டார்கள். அருள்வெளியாகிய ஆன்மா இயற்கையால் சிவானுபவத்தைப் பெறுவது உண்மை. இதற்கு வேதாகமங்களில் பலபட விரிந்த நாமங்கள் அனந்தம். அவற்றில் சில:-

அருட்சத்தி, அருள்வெளி, விருஷபம், தர்மதேவதை, அனாதி இயற்கை குணம், பரஞானம், அகரவுகரம், அருள் நடம், அன்பு, ஆன்மநெகிழ்ச்சி, ஆன்ம அசைவு, சுத்த தத்துவம், ஆன்ம அறிவின் பேதம் என இதை விரித்தார்கள்.

அருள் வடிவாய் சிவமாகியப் பின்னமன்றிப் பூரணமாய் இருப்பது நிரதிசயானந்தம். ஆனந்தமென்பது சந்தோஷம். நிரதிசயமென்பது ஆனந்தமின்மை. சீவர்களுக்குத் திருப்தி இன்பத்தை நேர்ந்தவரையில் செய்வது ஆனந்தானுபவம்.

அருள் வெளியின் வடிவாய் உண்மை என்னும் சிகாரமாகிய பதியோடு கூடி மௌனானந்தத்தில் இருப்பதே உண்மை. தருமத்தோடு கூடியவன் தேக நஷ்டத்தை அடையமாட்டான்.

*திருச்சிற்றம்பலம்*

# தேகம் நீடிப்பதற்குத் தீபப் பிரமாணம்

அகல் என்பது தேகம், எண்ணெய் - இரத்தம், திரி - சுக்கிலம், பிரகாசம் - ஆன்மா. ஆதலால் மேற்குறித்த தீபத்தினது திரியைத் தூண்டி விட்டாலும், காற்றுள்ள இடத்தில் வைத்தாலும், காற்றில்லா இடத்தில் வைத்தாலும், பெருந்தீபச் சமீபத்தில் சேர்த்தாலும், விட்டில், வண்டு, மூஷிகம், பூனை, முதலிய அஜாக்கிரதையாலும் மேற்படி தீபம் நஷ்டமாகும்.

புத்திமானிடத்தில் தீபத்தினது உபகரணங்களைக் கொடுத்து ஒரு நாளைக்குத் தீபம் பார்க்கச் சொன்னால், புத்தி விசாலத்தால் மேற்குறித்த அஜாக்கிரதையின்றி தகளிக்குச் சூடேறாமலும், எண்ணெயில் அழுக்கு ஏறாமலும், வர்த்தியில் தூசு, இறுகல், தளர்ச்சி, பருமன் இவைகளில்லாது சிறு திரி போட்டு அடிக்கடி தூண்டாமல் தீபத்தை மற்றொரு தினமும் இருக்கச் செய்விப்பான். மேற்குறித்த குற்றங்களோடு தீபம் ஏற்றினால் பதினைந்து வினாடி அல்ல கணம் இதில் சிட்டம் கட்டுவது இயற்கை. தூசு போக்கி வைத்தால் பதினைந்து நிமிஷத்திற்கு ஒருவிசை சிட்டம் கட்டும். விசேஷ அறிவுடையவன் மேற்குறித்த லோகம் முதலியவற்றில் தீபம் வையாது, வைர படிகங்களில் அமைத்த தீபத்தகளியில் மேற்குறித்த தீப உபகரணங்களைத் திராவகமாக்கி சுத்தாக்கினியால் பிரகாசம் உண்டாக்குவான். அப்போது சிட்டமும் பிரகாச நஷ்டமும் நேரிடாது.

ஆதலால் நம்முடைய தேகத்தில் சுக்கிலமாகிய திரியை விசேஷம் தூண்டி அடிக்கடி பெண்ணிடத்தாகிலும் வேறு தந்திரத்தாலாயினும் செலவு செய்துவிட்டால் திரிபோய் ஆயுளாகிய பிரகாசம் நஷ்டமாய்விடும். தொள்ளாயிரத்து அறுபது நாழிகை (16 நாளு)க்கொருதரம் தேகசம்பந்தம் செய்து ஆபாசப்பட்ட சிட்டமாகிய சுக்கிலத்தை வெளிப்படுத்திவிட வேண்டும். **இது மந்தனுக்கு.** அதிதீவிர பக்குவியாய் மேற்குறித்த வண்ணம் கடவுளிடத்தில் இலக்ஷியமும் ஜீவர்களிடத்தில் தயவும் உடையவனுக்கு சிட்டம் போன்ற சுக்கில ஆபாசம் நேரிடாது; தேகம் நீடிக்கும்.

**நம்மை நஷ்டம் செய்வன நான்கு:**

1. ஆகாரம், 2. நித்திரை, 3. மைதுனம் (உடல் உறவு), 4. பயம். இந்நான்கிலும் அதிக ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். இந்த நான்கினும் முக்கியமானவை ஆகாரம், மைதுனம். ஆதலால் இவ்விரண்டிலும் அதனிலும் அதிக ஜாக்கிரதையோடு இருக்க வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



ரிஷிகேஷத்தில் கங்கைக் கரை அருகில்

# சன்மார்க்க தியான முகாம் மற்றும் ஆன்மீக யாத்திரை

*"நாம் பல ஜனனங்களையும் தப்பி மேலான இந்த மனிதப்பிறவி எடுத்தது கடவுளின் திருவருளைப் பெறுவதற்கே. எவ்வகைப் பிரயாசத்தினாலாவது அந்த அருளை அடைய வேண்டும்."* — வள்ளல் பெருமானார்

## இந்த பயிற்சி முகாமில்...



- யோகா, பிராணாயாமம் மற்றும் தியான பயிற்சி
- திருவருட்பா பாராயணம்
- ஞானிகள், முனிவர்கள் தவம் செய்த குகைகளில் தியானம்
- பெரியோர்கள், சாதுக்களின் தரிசனம் மற்றும் அன்னதானம்
- கங்கையில் நீராடல்

போன்ற பல்வேறு அருள் நிகழ்வுகள் உள்ளடங்கிய ஆன்மீக புனித யாத்திரையில் கலந்துகொண்டு குருவருளையும் திருவருளையும் பெற அனைவரையும் அழைக்கின்றோம்.

**உணவு, தங்குமிடம், போக்குவரத்து அனைத்தும் சேர்த்து**

ரயிலில் செல்ல...

**ரூ.15,000/-**



நாட்கள்:

04/03/2018 ஞாயிறு இரவு முதல்
13/03/2018 செவ்வாய் காலை வரை



விமானத்தில் செல்ல

**ரூ.25,000/-**

நாட்கள்:

05/03/2018 திங்கள் மதியம் முதல்
11/03/2018 ஞாயிறு இரவு வரை

**செல்லும் இடங்கள்:** சென்னை – டெல்லி – ஹரித்துவார் – ரிஷிகேஷ் – வசிஷ்டர் குகை – தேவப்ரயாக் – டெல்லி – சென்னை.



**முன்பதிவு அவசியம்:**

**+91 99427 76351**

முதியவர்கள் மற்றும் குழந்தைகளுக்கு அனுமதி இல்லை

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly January 2018, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# சுத்த சன்மார்க்க சத்திய ஞானாச்சாரம்

கடவுள் சர்வ ஜீவதயாபரர். சர்வ வல்லபமுடையவர் ஆகையால் அவர், நம்மையும் சர்வ ஜீவதயவு உடையவர்களாய்ச் சர்வ வல்லபத்தையும் பெற்றுக் கொள்ளும்படி மனித தேகத்தில் வருவித்தார்.

எந்த ஜீவர்களிடத்தில் தயாவிருத்தியாகிய 'அருள்' விசேஷம் விளங்குகின்றதோ அந்த ஜீவர்களிடத்தில் 'கடவுள் விளக்கம்' விசேஷயமாயிருக்கும் மற்றயர்கள் இடத்தில் காரியப்படாது. ஆதலால் மலஜல சங்கல்ப காலங்கள் தவிர மற்றக்காலங்களில் கடவுளிடத்தில் அன்பும், ஜீவர்களிடத்தில் தயையும் செலுத்த வேண்டும்.

எல்லா உயிர்களிடத்தும் கடவுள் வியாபித்திருப்பதை அறிதலே ஈசுவர பத்தியாம். ஜீவகாருண்யம் உண்டானால் அன்புண்டாகும் அன்புண்டானால் அருளுண்டாகும் அருளுண்டானால் சிவானுபவம் உண்டாகும்.

திரு/திருமதி

Periodical Issue

Redirect to : அருள்திரு பாபு சாது

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: +91 80126 80865